தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 19, திருவள்ளுவர் ஆண்டு–2045

2014 ஆகஸ்ட் 4, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்"

வாய்மை என்று சொல்லப்படுவது எது என்றால், அது மற்ற உயிர்களுக்குத் தீங்கினைச் சிறிதும் உண்டாக்காத சொற்களைப் பேசுதல் ஆகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 315, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் மற்றும் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

315—

திட்டங்கள்

***5776—திரு. எம். ஆறுமுகம்:**

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆனைமலையாறு மற்றும் நல்லாறு திட்டங்களை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஆகஸ்ட் 4

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இம்மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு ஆனைமலையாறு மற்றும் நல்லாறு திட்டங்களை நிறைவேற்ற அனைத்துத் தொடர் நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் காவல் தெய்வம் தமிழகத்தின் ஒப்பற்ற ஒரே தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் மலர்ப்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முரண்டு பிடித்த கேரளாவிடமிருந்து முல்லைப் பெரியாறு அணையை மீட்டெடுத்ததுபோல், காவேரியைக் காத்து டெல்டா மாவட்டங்களில் வாழும் விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்ததுபோல், ஆனைமலையாறு திட்டம் நிறைவேற்றத் தடையாக 30 ஆண்டுகளுக்குமுன் இடைமலை ஆற்றின் குறுக்கே அணை கட்டி முடித்த கேரள அரசு கால்வாய் அமைக்கின்ற பணியை மட்டும் பாக்கி வைத்துக்கொண்டு, வேலை முடியவில்லை எனக் காரணம் காட்டி, ஆனைமலையாறு திட்டத்தைக் கிடப்பில் போட்டு வருகின்றது. நிபுணர் குழு அமைத்து எவ்வாறு முல்லைப் பெரியாறு அணையை மாண்புமிகு அம்மா அவர்கள் மீட்டெடுத்தார்களோ, அதுபோல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேரள அரசின் உண்மைக்குப் புறம்பான நிலையை கருணைத் தாயின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆனைமலையாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மேலும், எதிர்காலத்தில் கேரள அரசோடு போராட்டம் இல்லாமல் இருக்க, தமிழ்நாட்டுக்குச் சொந்தமான மேல்நீராறு

அணையிலிருந்து 14.500 கிலோ மீட்டர் tunnel அமைத்து மாவடை என்கிற இடத்தில் நல்லாறு ஆற்றில் இணைத்தால் 9 டி.எம்.சி தண்ணீர் நேரடியாக திருமூர்த்தி dam-க்குக் கிடைக்கும். இதற்கு மொத்த செலவு ரூ.550 கோடி என மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பொதுப் பணித் துறையினரால் காவேரி தொழில்நுட்ப ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிகிறேன். கேரள அரசின் அனுமதியில்லாமல் நிறைவேறும் இந்தத் திட்டத்தின்மூலம் செங்குத்தாக இறங்கும் நீரிலிருந்து ஆரம்பத்தில் 125 மெகா வாட் மின்சாரமும், முடிவில் 125 மெகா வாட் மின்சாரமும் உற்பத்தி செய்ய முடியும். ஆக 250 மெகா வாட் மின்சாரத்தோடு இப்போது பி.ஏ.பி. ஆயக்கட்டுப் பகுதிக்கு 9 டி.எம்.சி. தண்ணீர் திருமூர்த்தி அணைக்கு நேரடியாகச் செல்லும். எனவே இந்தத் திட்டத்தினை, 'கொடுத்து, கொடுத்து சிவந்த கரத்திற்குச் சொந்தக்காரர்' மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியாறு ஒப்பந்தத்தின்கீழ் ஒரு துணை ஒப்பந்தத்தின் வாயிலாக ஆனைமலையாற்றில் அணை கட்டி தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திருப்பிவிடும் திட்டம் உள்ளது. இதற்காக கேரள அரசுடன் பேச்சுவார்த்தையின்மூலம் துணை ஒப்பந்தம் செய்துகொள்ள, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து நல்ல பல முயற்சிகளை எடுத்து வருகிறார்கள் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இரு மாநில அமைச்சர்கள் அளவில் 28-4-2013 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இப்பொருள் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில் கேரள அரசு "ஆனைமலையாற்று நீரினை நீராற்றுக்குத் திருப்பி விடுவதற்கான தொழில்நுட்ப சாத்திய அறிக்கை-செப்டம்பர் 2010" என்ற ஒரு திட்ட அறிக்கையைத் தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசின் ஆய்வில் உள்ளது.

[2014 ஆகஸ்ட் 4

நல்லாறு திட்டம்

இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென தமிழ்நாட்டின் சார்பில் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் இந்தத் திட்டமானது மறு ஆய்விற்கு அப்பாற்பட்டது எனத் தெரிவித்து கேரள அரசு இதுவரை இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும், மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து இத்திட்டத்தினை ஏற்றுக்கொள்ள பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆணையிட்டு, தொடர் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்ட மக்களுக்கு எப்படி காவேரி நீர், மேட்டூர் அணை பிரதானமோ, தென் மாவட்டத்தில் உள்ள 5 மாவட்ட மக்களுக்கு எப்படி முல்லைப் பெரியாறு அணை பிரதானமோ, அதேபோல், கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் கொங்கு மாவட்ட மக்களுக்கு பரம்பிக்குளம்-ஆழியாறு, திருமூர்த்தி அணைக்கட்டு மிகப் பிரதானமானது. இது இந்தியாவினுடைய இரண்டாவது சிரபுஞ்சி ஆகும். மேலும், இந்தியாவிலேயே இரண்டாவதாக அதிகமாக மழை பெய்கின்ற பகுதி மேல்நீராறு அணைப் பகுதியாகும். அந்த மேல்நீராறுக்கும், கீழ்நீராறுக்கும் அடுத்து ஒரு சுரங்கப் பாதை அமைத்து, நல்லாறு அணைக்கட்டு கட்டி, அதன்மூலம் தண்ணீரை நேரடியாக திருமூர்த்தி அணைக்குக் கொண்டுவந்தால், மேல்நீராறிலிருந்து தண்ணீர் கீழ்நீராறுக்குச் சென்று, கீழ்நீராறிலிருந்து சோலையாறுக்குச் சென்று, சோலையாறிலிருந்து பரம்பிக்குளம் சென்று, பரம்பிக்குளத்திலிருந்து தூணக்கடவு சென்று, தூணக்கடவிலிருந்து பெருவாரிப்பள்ளம் சென்று, அங்கிருந்து சர்க்கார் பகுதியில் மின்சார உற்பத்தி செய்து, அதன்பிறகு 48 கிலோ மீட்டர் சமமட்ட கால்வாயாகத் திருமூர்த்தி அணைக்குத் தண்ணீர் வந்து சேருகிறபோது மூன்றில் ஒரு பங்கு தண்ணீர் சேதம் அடைந்துவிடுகிறது. எனவே, இந்தச் சேதாரத்தைத்

தவிர்ப்பதற்காக, மேல்நீராறிலிருந்து நேரடியாக சுரங்கப் பாதை அமைத்து, 350 மெகா வாட் மின்சாரம் தயாரிக்க முடியும் என்று நிபுணர்கள் குழு அறிக்கை கொடுத்திருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நல்லாறு அணையைக் கட்டி, மின்சாரத்தைத் தயாரித்து உடனடியாக கொங்கு மாவட்ட மக்களுக்குப் பரிசாக அந்த அணையையும், நீண்ட கால விவசாயிகளுடைய தேவையையும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக பூர்த்தி செய்து தருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மற்றும் கேரளா அரசுகளுக்கிடையே பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் 9-11-1958 முதல் நடைமுறையில் இருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின்படி, 9-11-1958 முதல் 30 ஆண்டுகளுக்குப் பிறகும், அதன்பிறகு ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பின்னரும் மறு ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்ய இரு மாநிலங்களுக்கிடையே பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அடுத்து, ஆனைமலையாறு திட்டம். பரம்பிக்குளம்-ஆனைமலையாறு திட்ட ஒப்பந்தத்தின்கீழ், ஆனைமலையாற்றில் அணைகட்டி தமிழ்நாட்டிற்கு 2.5 டி.எம்.சி. தண்ணீர் திருப்பி விடப்படும் திட்டம் உள்ளது. இதற்காக ஒரு துணை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கேரளா, இடைமலையாறு திட்டத்தை நிறைவேற்றியவுடன், தமிழ்நாடு ஆனைமலையாறு நீரைத் திருப்பிக்கொள்ளலாம் எனவும் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், கேரள அரசு, இடைமலையாறு திட்டம் இன்னும் முடிவுபெறவில்லை எனத் தொடர்ந்து தெரிவித்தும், ஆனைமலையாறு திட்டத்தை கேரள அரசே செயல்படுத்தும் எனவும் தெரிவித்து வருகிறது.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இரண்டாவது முறை முதலமைச்சராகப்

பொறுப்பேற்றபோது, இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் 6-11-2004 அன்று கேரள மாநில முதலமைச்சர் திரு. உம்மன்சாண்டி அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இரு மாநில அமைச்சர்கள் அளவில் 28-4-2013 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இப்பொருள் பரிசீலிக்கப்பட்டு, அதனடிப்படையில், கேரள அரசு ஆனைமலையாற்று நீரினை நீராற்றுக்குத் திருப்பிவிடுவதற்கான தொழில்நுட்ப சாத்திய அறிக்கை செப்டம்பர் 2010 என்ற ஒரு திட்ட அறிக்கையை தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைத்தது. அந்த அறிக்கையை ஆய்வு செய்ததில் கேரள அரசிடமிருந்து மேலும் சில அவசியமான தகவல்கள் பெறப்பட்டதும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நல்லாறு திட்டம். இத்திட்டம், நல்லாற்றின் குறுக்கே 7 டி.எம்.சி. அடி நீரைத் தேக்கி வைக்க ஒரு நீர்த்தேக்கம் கட்டவும் மற்றும் மேல்நீராறு சிற்றணையிலிருந்து நேரடியாக சுரங்கம் வழியாக நல்லாற்றிற்குத் திருப்பவும், 35 மெகா வாட் மேலும், கூடுதலாக 230 மெகா வாட் நீர்மின் உற்பத்தி செய்யவும் தயாரிக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தின் வாயிலாக தற்போதுள்ள சுற்றுப் பாதைக்கு மாற்றாக, அதாவது, மேல்நீராறிலிருந்து சோலையாறு நீர்த் தேக்கத்திற்கும், பின்னர் பரம்பிக்குளம் நீர்த்தேக்கத்திலிருந்து திருமூர்த்தி அணைக்கும் நீர் செல்லும் பாதைக்குப் பதிலாக நேரடியாக நல்லாறு ஓடைக்கும், அதன்பிறகு பாசனத்திற்காக திருமூர்த்தி அணைக்குக் கொண்டுசெல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் 85 கிலோ மீட்டர் நீளமுள்ள பாதை 20 கிலோ மீட்டராகக் குறைந்துவிடும். இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென தமிழ்நாட்டின் சார்பில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் இந்தத் திட்டமானது ஒரு புதிய திட்டம்; ஒப்பந்த மறுஆய்வுக்கு அப்பாற்பட்டது எனத் தெரிவித்து, கேரள அரசு இதனை இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. பரம்பிக்குளம்-ஆழியாறில் ஒப்பந்த மறு ஆய்வுக் கூட்டம் 28-4-2013-ல் இரு மாநில அமைச்சர்கள் முன்னிலையில் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. இதில் மேற்குறிப்பிட்ட அம்சங்கள் குறித்து, மீண்டும் பரிசீலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை

நிறைவேற்ற கேரள அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை மேற்கொண்டும், கேரள அரசு இத்திட்டத்திற்கு இசைவினை அளிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.*

திரு. ம. கலை அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கேற்ப சிறப்பான ஆட்சியைச் செய்து வருகிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மேலரசம்பட்டில் அணையைக் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் கடந்த கால ஆட்சியில் திட்டம் தீட்டப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அடிக்கல் நாட்டுகின்ற வேளையில், அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல், நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்து வந்த ஆட்சியிலும் அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டு, என்ன ஆனது என்றுகூடத் தெரியாமல் இருக்கிறது. பொதுவாக அணைக்கட்டுப் பகுதி விவசாயத்தையே பெரிதும் நம்பி இருக்கக்கூடிய சாதாரண சாமானிய ஏழை மக்கள் வாழுகின்ற பகுதி. மாண்புமிகு அம்மா அவர்கள்மீது அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருக்கக் கூடியவர்கள். அவர்களுடைய வாழ்வாதாரம் வளம் பெறவும், விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தைச் சிறப்பாகச் செய்திடவும், நிலத்தடி நீர் பெருகிடவும், அந்தப் பகுதியில் அணை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மேலரசம்பட்டில் அணைக் கட்டுவதற்கான முக்கியத்துவத்தைப்*

பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய எல்லைப் பகுதியான மலைப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மழை நீர் வீணாக முல்லையாற்றின் வழியாகவும், தாமிரபரணியாற்றின் வழியாகவும் கடலில் கலக்கிறது. இதனால் தண்ணீர்ப் பற்றாக்குறை சில நேரங்களில் ஏற்படுகிறது. தமிழக எல்லைப் பகுதிகளில் தண்ணீர் வீணாகப் பாய்ந்து நெய்யாற்றில்கூட கலக்கிறது. நெய்யாறு அணை ஒரு பிரச்சினைக்குரிய அணையாக இருக்கிறது. நமக்கு சுமார் 8 வருடங்களாகத் தண்ணீர் தரவில்லை. ஆகவே, நம்முடைய அரசு அந்த முல்லையாற்றுப் பகுதியிலே ஒரு புதிய அணையைக் கட்டக்கூடிய திட்டத்தைத் தருவீர்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். கேரள-தமிழக எல்லைப் பகுதிகளில் உள்ள தண்ணீர் நெய்யாறு அணைக்கும் செல்கிறது. மழை நேரங்களில் வீணாக முல்லையாற்றின் வழியாகவும், தாமிரபரணி வழியாகவும் சென்று கடலில் கலக்கிறது. இவற்றையெல்லாம் மனதில் வைத்து, அதைத் தடுத்து மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே முல்லையாறு பகுதியில் ஒரு புதிய அணையைக் கட்டினால், தண்ணீரைத் தேக்க முடியும். அதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யாறு என்பது ஒரு பன்மாநில நதியாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*